

# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)
துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

28.08.2023

## 18. புதுவழி திறக்கும் நம் ஆண்டவர்!

புதிய வழி திறக்கும், புதிய உடன்படிக்கையின் புத்தக சுருள் இயேசுவிடம் கொடுக்கப்பட்டது! அதில் "காணிக்கை, பலி" என்ற அத்தியாயத்தை இயேசு திறந்து பார்த்தார்! அந்த புத்தக சுருளில், அவர் கண்டது என்ன? பழைய ஏற்பாட்டின்படியான 'தசமபாகம்' என்ற பக்கம், எதுவும் எழுதப்படாமல் வெறுமையாயிருந்தது! அடுத்ததாக 'பலி' என்ற பக்கமும் வெறுமையாயிருந்தது! அதை அடுத்து, 'காணிக்கை' என்ற பக்கமும் வெறுமையாயிருந்தது! அடுத்த பக்கத்தில் "தன்னைக் குறித்து எழுதியிருப்பதைக் கண்டு" இயேசு வியந்தார்! பழைய ஏற்பாட்டின் தசமபாகம், காணிக்கை, பலி ஆகிய தனக்கு வெளியே உள்ள ஒன்றையும் விரும்பாமல், "தன்னையே அல்லது தன் முழு சரீரத்தையே" புதிய உடன்படிக்கையில் பிதாவானவர் விரும்புகிறார்! என இயேசு கண்டார். 'உடனே' இதோ, உம் சித்தத்தின்படி செய்ய வருகிறேன்! எனக்கூறி, முதலாவதை நீக்கிப்போட்டு, இரண்டாவதை நிலைநிறுத்தினார். அல்லேலூயா! (எபிரெயர்10:7-9).

இந்த புதுவழியே இப்போது, நமக்குள் மலர்ந்திட வேண்டும்! பிதாவின் சமூகத்தை மறைக்கும் நம் சுயத்தை, இயேசுவே தன்னில் ஏற்று, "சுயத்தை" சிலுவையின் வழியில் அழித்து பிதாவின் சமூகம் கிட்டிச் சேர நம் யாவரையும் ஆண்டவர் நடத்துகிறார்!

– ரத்னம்